# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் சிறப்பு அவசரக்கூட்டம்

## சிறப்பு தீர்மானங்கள் - நாள் : 24.02.2015

**2) ம.பொ.2/005667/2015**

மதுரை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு தற்போது 15 இலட்சம் மக்கள் தொகை உள்ளது. இம்மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவடைந்துள்ள நிலையில் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது. மாநகர வளர்ச்சிக்கு தேவையான உட்கட்டமைப்புகள் பல்வேறு திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்பட்டு, தன்னிறைவு பெற்ற மாநகராட்சியாகவும் அடிப்படை வசதிகளை முழுமையாக மக்களுக்கு நிறைவேற்றிய மாநகரட்சியாகவும் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இம்மாநகர இளைஞர்கள் நலன் கருதியும் அவர்களுடைய கலை, கல்வி, உடல் மற்றும் மனநலத்தினை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் கல்வியறிவும் உடல் மற்றும் மனநலமும் மிக முக்கியமான ஒன்றாக இருக்கும் என்பதனை கருத்தில் கொண்டு மாநகராட்சி சார்பாக **“இளைஞர் மேம்பாட்டு மையம்”** நான்கு மண்டலங்களிலும் மண்டலத்திற்கு தலா ஒரு மையம் வீதம் நான்கு மையங்கள் துவங்க வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

இளைஞர்களின் உயர்கல்விக்கு தேவையான ஆலோசனை மையம் ஒன்றை நடத்துவதன் மூலம் மதுரை மாநகராட்சி பகுதிகளில் இருக்கின்ற இளைஞர்களுக்கு எந்தெந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றது என்கின்ற ஆலோசனைகளையும் உயர்கல்விகாக வெளிநாட்டிற்கு சென்று கல்வி பயில வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு இருக்கின்ற இம்மாநகர இளைஞர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்குவதற்கென இளைஞர் மேம்பாட்டு மையத்தில் ஒரு பிரிவாக **“உயர்கல்வி மேம்பாட்டு பிரிவு”** என ஒரு பிரிவினை உருவாக்கி அதன் மூலம் அனுபவம் மிகுந்த ஆலோசகர்களை அமர்த்தி உரிய ஆலோசனைகளை இப்பிரிவின் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கல்விக்கான கடன் உதவிகளை பெறுவதற்கு தேவையான ஆலோசகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இப்பிரிவின் மூலம் வேலை வாய்ப்பு குறித்த ஆலோசனைகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநகர இளைஞர்களின் உடல் மற்றும் மனநலத்தினை பேணிக்காக்கும் பொருட்டு ஆண் மற்றும் பெண் இரு பாலர்களுக்கும் தனித்தனியாக உடற்பயிற்சி மையங்கள் அமைக்கவும் தனி நபர் திறனை ஆய்வு செய்து அவர்களின் திறமைகளுக்கேற்ப விளையாட்டுத் துறைகளை தேர்வு செய்து அதற்குரிய பயிற்சியாளர்கள் மூலம் உரிய பயிற்சி வழங்கி அவர்களை தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறவும் போட்டியில் வெற்றி பெறுவதற்கு தேவையான உடல் மற்றும் மனநலத்தினை உறுதிபடுத்தவும் மாவட்ட விளையாட்டுத் துறையுடன் இணைந்து இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கவும் அவர்களின் உடல் மற்றும் மனநலனை பேணிக்காக்கவும் **“இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு பிரிவு”** ஒன்றை இளைஞர் மேம்பாட்டு மையத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநகர இளைஞர்களின் கலை மற்றும் பண்பாட்டினை வளர்க்கும் வகையில் இசை பயிற்சி இம்மையத்தின் மூலம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இளைஞர்களின் குறிக்கோளுக்கேற்ப மிருதங்கம், வயலின், கிட்டார், உறர்மோனியம், புல்லாங்குழல், டிரம்ஸ் மற்றும் இதர இசைக் கருவிகளை பயிற்றுவிக்க தேவையான பயிற்சியாளர்களை ஒருங்கிணைப்பு செய்யவும் நடனம், நாட்டியம் போன்ற கலைகளை கற்றுக் கொடுப்பதற்கென அதற்குரிய அனுபவமிக்க பயிற்சியாளர்களை ஒருங்கிணைப்பு செய்யவும் **“கலை மேம்பாட்டு பிரிவு”** ஒன்றை இளைஞர் மேம்பாட்டு மையத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மூன்று பிரிவுகள் அடங்கிய இளைஞர் மேம்பாட்டு மையம் அமைப்பதன் மூலம் இளைஞர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமையாகமால் தடுக்கப்பவதுடன் அவர்களின் உடல்நலம் மற்றும் மனநலம் பேணிக்காக்கப்படுவதோடு உயர்ந்த கல்வியினை பெறுவதற்கும் வழிகாட்டக் கூடிய ஒரு மையமாகவும் வேலைவாய்ப்பு குறித்து உரிய ஆலோசனைகளை வழங்கக் கூடிய ஒரு மையமாகவும் ஒவ்வொரு இளைஞர்களுக்குள் இருக்கக் கூடிய தனித் திறமைகளை அறிந்து அந்த திறமையினை வளர்த்துக் கொள்வதற்கு இம்மையம் பெரிதும் உறுதுணையாக இருக்கும்

இளைஞர்கள் மேம்பாட்டிற்கென மேற்குறிப்பிட்டுள்ள **மூன்று பிரிவுகளான உயர்கல்வி மேம்பாட்டு பிரிவு, விளையாட்டு மேம்பாட்டு பிரிவு மற்றும் கலை மேம்பாட்டு பிரிவு** ஆகிய பிரிவுகளை இளைஞர் மேம்பாட்டு மையத்தின் மூலம் நடத்துவதற்கு நான்கு மண்டலத்திலும் நான்கு இடங்களை தேர்வு செய்து அரசின் மானியத்தின் மூலமும் தனியார் பங்களிப்பின் மூலமும் மாநகராட்சியின் வருவாய் நிதி ஆதாரத்தினை கருத்தில் கொண்டு **“ஜீரோ பட்ஜெட் திட்டம்”** என்கின்ற முறையில் இளைஞர் மேம்பாட்டு மையம் ஒன்றினை நான்கு மண்டலங்களிலும் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மானம் எண்.847**

**மதுரை மாநகராட்சியில் நான்கு மண்டலங்களிலும் இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டு அவைகளுக்கு “புரட்சித்தலைவி அம்மா இளைஞர்மேம்பாட்டு மையம்” என பெயரிட்டு மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.**

**3) H4/030003/14**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் வரும் முன் காக்கும் பொருட்டு யானைக்கல் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி தகவல் மையம் மூலம் கட்டணமில்லா நிலவேம்பு கசாயம் மற்றும் மலிவு விலையில் மூலிகை சாறுகள் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.848**

**“மலிவுவிலை அம்மா மூலிகைசாறு மையம்” என பெயரிட்டு கட்டணமில்லா நிலவேம்பு கசாயம் மற்றும் மலிவுவிலை மூலிகை சாறுகள் வழங்க மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.**

**4) H5/001060/15**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் **24.02.2015** அன்று அரசு, மாநகராட்சி மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் அன்றைய தினமே கட்டணமில்லா பிறப்பு சான்றிதழ் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மானம் எண்.849**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 24.02.2015**

## தீர்மானம்: 1

அன்பின் வடிவமாய், கருணையின் பிறப்பிடமாய், ஏழை எளிய மக்களின் காவல் தெய்வமாய், உலக தமிழ் இனத்தின் ஒட்டுமொத்த
காவல் தெய்வமாய் விளங்கும்

ஒரு கோடி 85 இலட்சம் குடும்பங்களுக்கு மாதம்தோறும்20 கிலோ விலையில்லா அரிசி வழங்கி தமிழக மக்களின் பசியினை போக்கிய
வாழும் அன்னபூரணியே!

தாய்மார்களின் வேலை பளுவினை போக்க ஒவ்வொரு இல்லங்கள் தோறும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிய
பெண் இனத்தின் காவல் தெய்வமே

ஏழைஎளிய மக்கள் பயன்பெறும் வண்ணம் குறைந்த விலையில் அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா சிமெண்ட் வழங்கி ஏழைஎளிய மக்களுக்காவே வாழ்ந்து வரும்
ஏழைகளின் இதய தெய்வமே

நாட்டின் வருங்கால தூண்களான மாணவ சமுதாயத்திற்கு எட்டாக்கனியாக இருந்த மடிக்கணினியை எட்டும் கனியாக அவர்கள் கைகளில் தவழ செய்து கல்வியில் மாபெரும் புரட்சியை படைத்திட்ட உலக அதிசயமே

தென்மாவட்ட மக்களின் ஜிவாதார பிரச்சனையான முல்லை பெரியாரை மாபெரும் சட்ட போராட்டம் நடத்தி 37 ஆண்டுகளுக்கு பின் மாபெரும் தீர்ப்பினை பெற்று தந்திட்டு இதன் மூலம் விவசாய மக்களுக்கும், மதுரை மக்களுக்கும் நிரந்தர குடிநீர் பிரச்சனையை தீர்த்து வைத்த
விவசாயகளின் காவல் தெய்வமே!

கிராமபுற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட
விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கிய
பொருளாதார ஞானியே

தமிழகத்தில் உள்ள 38 இலட்ச முதியோர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு தாயாக நான் இருக்கிறேன் என்று மாதம்தோறும்
1,000-ரூபாய் உதவிதொகை வழங்கி வரும்
மனிதநேய தலைவியே

இருளால் இருந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிய
தமிழகத்தின் ஒளி விளக்கே!

தமிழகத்தை உலக வல்லரசு நாடுகளுக்கு இணையாக கொண்டு செல்ல தொலைநோக்கு திட்டமான வி‘ன் 2023 யை படைத்திட்ட

வாழும் பிரம்மாவே

தி.மு.கவால் சீர் அழிக்கப்பட்ட மதுரை மாநகராட்சியை மீட்டதுமல்லாது மதுரையை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல முதற்கட்டமாக

ரூபாய் 250 கோடியை நிதியினை ஒதுக்கீடுமட்டுமல்லாது தொடர்ந்து

மதுரை மாநகராட்சிக்கு பல்வேறு நிதியினையும், திட்டத்தினையும் கிள்ளிக் கொடுத்தால் போதாது என்று அள்ளி அள்ளி கொடுத்து வரும்

வாழும் கருணைக் கடலே

தமிழக மக்களுக்கு அர்பணித்த மழைநீர் சேகரிப்பு, அம்மா உணவகம், மடிகணினி உள்ளிட்ட திட்டங்கள் மற்றும் பல்வேறு உன்னத வளர்ச்சி திட்டங்களை இந்திய தேசம் மட்டுமல்லாது உலக நாடுகளுக்கே வழிகாட்டியாக உருவாக்கி தந்திட்ட

வாழும் உலக அதிசியமே

மக்கள் போற்றும் எங்கள் மாதரசியே!

மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளப்பிறந்த

தரணி போற்றும் தங்க தாரகை

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சி தலைவி

அம்மா அவர்களின் அகவை 67 வது பிறந்த நாள் விழா காணும் இந்நன்னாளில் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி மீண்டும் தழிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக வரவேண்டியும் உடல் நலத்தோடு பல்லாண்டு காலம் வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இம்மாமன்றம் பிராத்தனை செய்வதோடு மக்களின் முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் நல்வழி காட்டுதல் படி மக்கள் பணியாற்றுவோம்

என்று சூளுரை ஏற்கிறோம்.

**<u>தீர்மானம் எண்.846</u>**